**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.89/2023 |
| Deposition of Witness for | : | PW– 4 |
| Name and Age | : | திரு. முனியப்பன் (வயது 48) |
| Father / Husband Name | : | சின்னபையன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | தொட்லாம்பட்டி |
| Taluk | : | பென்னாகரம் |

**நாள்** – 16.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 and A2 present. A3 absent. Petition U/s.355 BNSS filed and allowed.**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது தொட்லாம்பட்டியில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். பாலக்கோடு புதூர் மாரியம்மன் கோவில் தெருவில் என் மாமனாருக்கு சொந்தமான பூர்விக சொத்து உள்ளது. அந்த சொத்தை என் மாமனார் செல்வராஜ் என்பவருக்கு விற்பனை செய்தார். அந்த சொத்தை செல்வராஜ் விற்பனை செய்ய இருந்தார். அந்த சொத்தை என் மாமனார் வீட்டு சொத்து என்பதால் நான் விலைக்கு வாங்கி என் மனைவி சித்ராவின் பெயரில் பத்திரம் பதிவு செய்தேன். அதன்பிறகு நாங்கள் தொட்லாம்பட்டிக்கு குடிபெயர்ந்தோம். என் மனைவியின் பெயரில் விலைக்கு வாங்கிய சொத்தை என் மாமியார் குடும்பத்தார் பராமரித்து வந்தார்கள். நாங்கள் வாங்கிய சொத்தில் செல்வராஜின் மனைவி ஆஜர் எதிரி மகேஸ்வரி வில்லங்கம் செய்து அவருக்கும் அந்த சொத்தில் உரிமை உள்ளது என்று செட் கட்டிக்கொண்டார். 18.01.2014ல் என் மனைவி சித்ரா அவருடைய அம்மாவை பார்க்க பாலகோட்டிற்கு வந்தார். அப்போது என் மனைவியிடமும், என் மாமியாரிடமும் ஆஜர் எதிரி மகேஸ்வரி மற்றும் அவருடைய அப்பா, அவருடைய தம்பி திருப்பதி அந்த இடம் எங்களுக்கு தான் என்று சொல்லி தகராறு செய்துள்ளார்கள். பிறகு என் மனைவியையும், என் மாமியாரையும் எதிரிகள்

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.07.16 17:53:58 +0530

அடித்து இடத்திற்குள் வந்தால் வெட்டி பொலி போட்டுவிடுவோம், இங்கேயே கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். என் மனைவி எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அங்கு எதிரிகள் யாரும் இல்லை. பின் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். அங்கு எங்கள் புகாரை ஏற்றுக்கொள்ளாததால் மறுநாள் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தோம். நில அபகரிப்பு பிரிவினர் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது பூர்விகம் தொட்லான்டஹள்ளி கிராமம் ஆகும். நான் பிறந்ததில் இருந்து அங்கு தான் வசித்து வருகிறேன். எனது மனைவி பாலக்கோடு காவாபட்டி கிராமத்தை சேர்ந்தவர். எனக்கு 1989ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு எனது மனைவி என்னுடன் தான் வசித்து வருகிறார். இடம் சம்மந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் எந்த தகராறும் இல்லை. முதல்விசாரணையில் நிலம் ஆரம்பத்தில் மாமனாருக்கு சொந்தமானது என சொல்லியுள்ளது போல் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. சம்பவத்திற்கு பிறகு பாலக்கோடு காவல்நிலையத்திற்கு சென்ற விபரம் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பே நிலம் சம்மந்தமாக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரியல்ல. எனது மனைவியும் செல்லவில்லை. சம்பவ இடத்தில் சீட்டு எத்தனை அடிக்கு எத்தனை அடி போடபட்டுள்ளது என்றால் எனக்கு அடி கணக்கில் தெரியாது. மேற்படி சீட்டு போடுவதற்கு இரண்டு மூன்று மாதங்கள் ஆகும் என்றால் சரியல்ல, ஒரே இரவில் கட்டிவிடலாம். ஒரே இரவில் கட்ட இயலாது என்றால் சரியல்ல. மேற்படி ஷெட்டிற்கு கதவு எண் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. மேற்படி கட்டிடத்திற்கு 1/244 என கதவு எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கட்டியிருக்கும் ரூமை பார்க்கவில்லை. மேற்படி நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு எண்.109/2012 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது மனைவியும் ஒருதரப்பினர் என்றால் சரிதான். மேற்படி வழக்கை எனது மனைவி ஆஜராகி நடத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கான வீட்டு வரி ரசீது உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்வராஜிடம் இருந்து நான் நிலத்தை கிரையம் செய்தபோது நிலத்தின் அசல் கிரைய பத்திரம் பெற்றேனா என்றால் பெற்றுள்ளேன். மேற்படி கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய தயாராக உள்ளேன். எனது மனைவி மற்றும் மாமியாரை கெட்டவார்த்தையில் திட்டியது மற்றும் மிரட்டியது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மனைவி மற்றும் மாமியார் சொல்லி தான் எனக்கு தெரியும். சம்பவத்தின் போது சம்பவ

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.16 17:54:04 +0530

இடத்தில் 20 நபர்கள் இருந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிலத்தை செல்வராஜின் மாமனார் செல்வராஜின் பெயரில் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி மகேஸ்வரி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல நாங்கள் நிலத்தை வாங்கியதற்கு பிறகு தான் வீடு கட்டினார்கள். செல்வராஜிடம் இருந்து நாங்கள் கிரையம் செய்வதற்கு முன்பே அவர்கள் குடும்பத்தில் தகராறு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் நிலத்தை விலைக்கு வாங்கியதற்கு பின்பு எதிரிகள் ஷெட் கட்டவில்லை என்றாலும், அதற்கு முன்பே ஷெட் கட்டி எதிரி மகேஸ்வரி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. எதிரி சின்னசாமி, எதிரி மகேஸ்வரியின் தந்தை ஆவார். எதிரி திருப்பதி எதிரி மகேஸ்வரியின் சகோதரர் ஆவார். எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்தால் நிலத்தை விட்டுவிடுவார்கள் என வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், பொய்யான புகாரின் மீது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்கில் வெற்றி பெறவே வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.16 17:54:10 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.89/2023 |
| Deposition of Witness for | : PW- 5 |
| Name and Age | : திரு. வெங்கடேசன் (வயது 47) |
| Father / Husband Name | : பழனிசெட்டி |
| Occupation | : கிராம நிர்வாக அலுவலர் |
| Village | : அதகபாடி கிராமம் |
| Taluk | : தர்மபுரி |

**நாள்** – 16.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 and A2 present. A3 absent. Petition U/s.355 BNSS filed and allowed.**

**PW- 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது அதகபாடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். 20.01.2014ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நான் பாலக்கோடு கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது தர்மபுரி மாவட்ட நிலஅபகரிப்பு பிரிவு காவலர் அலுவலகத்திற்கு வந்து பாலக்கோடு கிராம சர்வே எண்.840/2A, 2B நிலத்தை அடையாளம் காட்டும்படி கேட்டார். நானும் என் கிராம உதவியாளர் சுப்பிரமணியும் சர்வே எண். 840/2A, 2B நிலத்திற்கு உண்டான A Register, FMB–யும் எடுத்துக்கொண்டு நிலத்திற்கு சென்றோம். போலிசாருக்கு மேற்படி சர்வே எண்ணின் நிலத்தை அடையாளம் காட்டினோம். போலிசார் சம்பவ இடத்தை ஒரு வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வைமகஜரில் நானும், கிராம உதவியாளர் சுப்பிரமணியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நிலஅபகரிப்பு பிரிவில் வந்த புகார் சம்மந்தமாக மேற்படி நிலத்தை அடையாளம் காட்டும்படி போலிசார் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.16 17:54:17 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் நிலத்தை அடையாளம் காட்டினேன். என்னுடன் நில அளவையர் வரவில்லை. நான் காண்பித்த இடத்தில் என்ன இருந்தது என்றால் ஹாலோ பிளாக்ஸ் கற்கள் போட்ட ஷெட் இருந்தது, வேறு ஏதாவது இருந்ததா என நினைவில்லை. மேற்படி ஷெட்டில் கதவு எண் இருந்ததா என்றால் எனக்கு நினைவில்லை. நிலத்திற்கு கிழக்கு திசையில் தேவராஜ் என்பவரது வீடு இருந்தது. தெற்கு திசையில் பாலக்கோடு – மல்லசமுத்திரம் செல்லும் தார் சாலை உள்ளது. பாலக்கோடு கிராமத்தில் ஒரு ஆண்டுகள் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். அதனால் அந்த இடம் எனக்கு பரிட்சையம் என்றால் சரிதான். நான் அடையாளம் காண்பித்த நிலத்திற்கும் தேவராஜ் நிலத்திற்கும் இடையில் எதுவும் இல்லை என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பார்வைமகஜரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதே கிடையாது என்றால் சரியல்ல. காவல் துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G — Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.07.16 17:54:22 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.89/2023 |
| Deposition of Witness for | : PW- 6 |
| Name and Age | : திரு. சுப்பிரமணி (வயது 61) |
| Father / Husband Name | : **சிக்கண்ணன்** |
| Occupation | : கிராம உதவியாளர் ஓய்வு |
| Village | : காவாபட்டி |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 16.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 and A2 present. A3 absent. Petition U/s.355 BNSS filed and allowed.**

**PW- 6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கிராம உதவியாளராக பணி செய்து ஓய்வு பெற்று தற்போது காவாபட்டியில் குடியிருந்து வருகிறேன். 20.01.2014ம் தேதி பாலக்கோடு கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது காலை சுமார் 09.30மணிக்கு காவல் ஆய்வாளர் வந்து காவாபட்டியில் உள்ள சர்வே எண்.840/2A, 2B நிலத்திற்கு செல்லவேண்டி அடையாளம் காட்டும் படி கேட்டார்கள். A Register, FMB–யும் எடுத்துக்கொண்டு நானும், கிராம நிர்வாக அலுவலரும் சம்மந்தப்பட்ட சர்வே எண் நிலத்திற்கு சென்றோம். அங்கு போலிசார் சம்பவ இடத்தை ஆவணங்கள் மூலம் பார்த்து ஒரு வரைபடம் வரைந்து எழுதி எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் சேர்ந்து கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆவணங்கள் அடிப்படையில் தான் நிலத்தை அடையாளம் காட்டினோம் என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் ஷெட் ஒன்று 10X10 அளவில் இருந்தது மீத இடங்கள் காலியாக இருந்தது. மேற்படி அளவு அளந்து பார்க்கவில்லை தோராயமாக சொன்னேன். எனக்கு காவாபட்டி தான் பூர்விகம் ஆகும். காவாபட்டி எனது பூர்வீகம் என்பதாலும், அதே பகுதியில் நான் கிராம நிர்வாக அலுவலருக்கு

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.16 17:54:29 +0530

உதவியாளராக எனது பணிக்காலம் முழுவதும் பணி செய்யததால் அந்த பகுதி எனக்கு நன்றாக தெரியும். அதனால் எனக்கு அந்த பகுதி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். எனது உயரதிகாரி கிராம நிர்வாக அலுவலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடமும் எங்களது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல்துறையும், நாங்களும் அரசாங்க துறை என்பதால் நான் அவர்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசாருக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்டவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.16 17:54:36 +0530

Judicial Magistrate,
Palacode.